# தமிழ்நாடு மற்றும் கேரளாவில்
# வீடுகளுக்கே வந்து மளிகை பொருட்களை
# பாதுகாப்பாக வினியோகம் செய்யும்
# புதிய திட்டத்தை அறிமுகம் செய்த பிளிப்கார்ட்

- கோவை மற்றும் மதுரை, திருச்சி, ஈரோடு, எர்ணாகுளத்தை சுற்றியுள்ள வாடிக்கையாளர்களுக்கு தினந்தோறும் பயன்படுத்தும் தரமான மளிகை பொருட்கள் வீடுகளுக்கு வந்து பாதுகாப்பாக வினியோகம் செய்யப்படும்
- மளிகை பொருட்கள் வினியோகத்திற்காக கோவையில் துவக்கப்பட்டுள்ள நிறைவேற்று மையத்தில் 1100 பேருக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளது; உள்ளூர் விற்பனையாளர்கள் மற்றும் உள்ளூர் விவசாயிகள் வளர்ச்சிக்கும் இந்த திட்டம் உதவியாக இருக்கும்
- அன்றாட பயன்பாட்டிற்கான முக்கிய உணவுப் பொருட்கள், தின்பண்டங்கள், குளிர்பானங்கள் மற்றும் இனிப்பு வகைகள் உள்ளிட்ட 7 ஆயிரம் பொருட்கள் வினியோகம்

கோவை, ஆக. 13-

இந்தியாவில் உள்நாட்டு ஆன்லைன் வர்த்தகத்தில் முன்னணி நிறுவனமாக திகழும் பிளிப்கார்ட் தனது மளிகை பொருட்கள் சேவை விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாடு மற்றும் கேரளாவில் உள்ள வாடிக்கையாளர்களின் வீடுகளுக்கே சென்று பாதுகாப்பான மற்றும் தரமான மளிகை பொருட்களை சிறப்பான விலையில் வினியோகம் செய்யும் புதிய திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

பிளிப்கார்ட்டின் மளிகை பிரிவில் 200க்கும் மேற்பட்ட வகைகளில் 7 ஆயிரம் தயாரிப்புகள் இடம் பெற்றுள்ளது. இதில் தினசரி பயன்பாட்டிற்கான உணவு பொருட்கள், தின்பண்டங்கள் மற்றும் குளிர்பானங்கள், இனிப்பு வகைகள், தனிப்பட்ட பாதுகாப்பு என இன்னும் பலவகைகள் உள்ளது. இந்த மளிகை பொருட்களை வாடிக்கையாளர்கள் தங்களின் குரல் பதிவு மூலமும் தேர்வு செய்யலாம். மேலும் இந்த பொருட்களை வாங்க கடன் வசதிகள் வழங்கப்படுவதோடு, ஆர்டர் செய்யும் பொருட்கள் அனைத்தும் திறந்த நிலையிலேயே வாடிக்கையாளர்கள் பார்த்து அறிந்து கொள்ளும் வகையிலேயே வினியோகம் செய்யப்படும்.

இந்த மளிகை பொருட்களின் தடையில்லாத வினியோகத்திற்காகவும் அவற்றை பாதுகாப்பாக வைப்பதற்காகவும் இந்நிறுவனம் சமீபத்தில் கோவையில் நிறைவேற்று மையத்தை துவக்கியது. இதன் காரணமாக கோவை மற்றும் மதுரை, திருச்சி, எர்ணாகுளம், திருப்பூர், ஈரோடு, திரிச்சூர், பாலக்காடு மற்றும் மலப்புரம் பகுதிகளை சுற்றியுள்ள வாடிக்கையாளர்களுக்கு தினந்தோறும் பயன்படுத்தும் தரமான மளிகை பொருட்கள் எந்தவித தடையும் இல்லாமல் வீடுகளுக்கே சென்று பாதுகாப்பாக வினியோகம் செய்யப்படும். இந்த நிறைவேற்று மையத்தின் மூலம் 150 பின்கோடு கொண்ட இடங்களுக்கு பொருட்கள் வினியோகம் செய்யப்படும். 1.25 லட்சம் சதுர அடியில் கோவையில் துவக்கப்பட்டுள்ள நிறைவேற்று மையம் நேரடியாக 1,100 பேருக்கு வேலை வாய்ப்பை வழங்கி உள்ளதோடு, உள்ளூர் வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதாரத்தை உயர்த்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. பிளிப்கார்ட்டின் இந்த மளிகை பொருட்கள் வர்த்தகமானது நிலையான வளர்ச்சியோடு உள்ளூர் உணவு பதப்படுத்தும் தொழிலுக்கு ஒரு உத்வேகத்தை அளிக்கிறது. மேலும் இந்திய விவசாயம் மற்றும் சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளையும் ஆதரிக்கிறது.

தமிழக தொழில்துறை முதன்மை செயலர் முருகானந்தம் இது குறித்து கூறுகையில், தடையில்லாத பொருட்கள் போக்குவரத்து மற்றும் கிடங்குகளில் அதிக முதலீடு செய்வதை ஊக்குவிப்பதில் தமிழக அரசு உறுதியாக உள்ளது. பிளிப்கார்ட்டின்

நிறைவேற்று மையம் வணிகர்களுக்கு உதவியாக இருப்பதோடு அவர்களின் சந்தை வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கும் என்று தெரிவித்தார்.
தமிழக வழிகாட்டு பிரிவு நிர்வாக இயக்குனரும் தலைமை செயல் அதிகாரியுமான பூஜா குல்கர்னி கூறுகையில், பிளிப்கார்ட்டின் இந்த நிறைவேற்று மையம் உள்ளூர் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும். தமிழ்நாட்டை பொறுத்தவரை மிகவும் நகரமயமாக்கப்பட்ட மாநிலமாக இருப்பதால், அது பிளிப்கார்ட்டின் ஆன்லைன் வணிகத்திற்கு அதிக உத்வேகத்தை அளிக்கும் என்று தெரிவித்தார்.
பிளிப்கார்ட், மளிகை பிரிவு துணைத் தலைவர் ஸ்மிரிதி ரவிச்சந்திரன் கூறுகையில், கடந்த ஒரு வருடத்தில், நாடு முழுவதும் உள்ள நுகர்வோர் ஆன்லைனில் மளிகை பொருட்கள் வாங்குவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். விற்பனையாளர்கள், பிராண்டுகள் மற்றும் விவசாயிகளுடன் இணைந்து இதை அதிகரிப்பதில் பிளிப்கார்ட் அதிக கவனம் செலுத்தி வருகிறது. மளிகை பொருட்கள் என்பது அந்தந்த பகுதி சார்ந்த ஒன்றாகும். சிறந்த தரமான தேசிய பிராண்டுகளை நுகர்வோரின் வீட்டு வாசலுக்கே நாங்கள் கொண்டு செல்வதோடு மட்டுமல்லாமல், நுகர்வோரின் தேவையை அறிந்து அவர்களுக்கு சிறப்பான சேவை வழங்குவதோடு அதற்காக அந்தந்த பகுதியில் உள்ளூர் ஆதார திறன்களை உருவாக்குவதிலும் நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம் என்று தெரிவித்தார்.
வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளித்து வரும் பிளிப்கார்ட், மேலும் லட்சக்கணக்கான விற்பனையாளர்கள் மற்றும் சிறு குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகளை விற்க ஒரு சிறப்பான ஆன்லைன் சந்தையை வழங்குவதன் மூலம் லட்சக்கணக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கி உள்ளது. பிளிப்கார்ட் அதன் வினியோக நெட்வொர்க்கில் மிக உயர்ந்த பாதுகாப்பு நெறிமுறைகளை தொடர்ந்து பின்பற்றி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**About the Flipkart Group**

The Flipkart Group is one of India's leading digital commerce entities and includes group companies Flipkart, Myntra, Flipkart Wholesale, and Cleartrip. The Group is also a majority shareholder in PhonePe, one of the leading payments apps in India.

Started in 2007, Flipkart has enabled millions of consumers, sellers, merchants, and small businesses to be a part of India's digital commerce revolution, with a registered customer base of more than 350 million, offering over 150 million products across 80+ categories. Our efforts to democratize commerce in India, drive access and affordability, delight customers, create lakhs of jobs in the ecosystem, and empower generations of entrepreneurs and MSMEs have inspired us to innovate on many industry firsts. Flipkart is known for pioneering services such as Cash on Delivery, No Cost EMI and easy returns – customer-centric innovations have made online shopping more accessible and affordable for millions of Indians. Together with its group companies, Flipkart is committed to transforming commerce in India through technology.

**For more information, please contact media@flipkart.com**